IJNRD.ORG ISSN : 2456-4184
INTERNATIONAL JOURNAL OF NOVEL RESEARCH AND DEVELOPMENT (IJNRD) | IJNRD.ORG
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருக்கோயில்கள் வளர்த்த ஆடல் கலைகள்

**முனைவர் கு. பிரகாஷ்**
உதவிப்பேராசிரியர் (பணி நிரவல்)
இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்நாடு காலம் காலமாய் இசை நாட்டியத்தில் வரலாறு படைத்து வரும் திருநாடு. நமது ஆலயங்களில் இறை வழிபாட்டில் இசையும் நாட்டியமும் மிக முக்கியமான அங்கம் வகித்திருந்தது. இசை வழிபாடில்லாத இறைவழிபாடு உயிரில்லாத உடல் என்று கருதி பண்டைத் தமிழர்கள் ஆடல் பாடல் போன்ற கலைகளை ஆலயங்களில் முறைப்படுத்தி கட்டாயமாக்க வைத்தார்கள். அன்றைய . காலக்கட்டத்தில் ஆலயம் வெறும் வழிபாட்டுத் தல மட்டுமில்லாது. வேதங்கள் உயர்கல்வி ஆகமங்கள், சாத்திரங்கள் போன்ற கல்விகள் பயிலும் கல்விக்கூடமாகவும் இருந்துள்ளது. இவை தவிர இசை, நாட்டியம், சிற்பம், சித்திரம் போன்ற கலைகளும் அங்கு பரம்பரையாக பயிற்றுவிக்கப்பட்டு போற்றிப் பாதுகாக்கப்பட்டு ஆடல் கலையானது வளர்ந்த வண்ணமாக இருக்கிறது என்பதை பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் ஆய்வுச்சுருக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

1. நாட்டியம் - ஆடல்கலை
2. சித்திரம் - ஓவியம்
3. சிற்பம் - சிலை
4. பெருவங்கியம் - நாதஸ்வரம்
5. ஆலயம் - வழிபாட்டுத்தலம்
6. சின்னமேளம் - குழுவினர்

**முன்னுரை**

பரதம் என்ற நடனக்கலை சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் தோன்றிய தமிழர் வளர்த்த அழகுக் கலைகளுள் ஒன்றாகும். இக்கலையானது மன்னர்கள் வள்ளல் பெருமக்கள், கலையார்வம்மிக்க மக்கள், மரபுவழி நாட்டியக் கலைஞர்களாலும் பாதுகாக்கப்பட்டு இன்று மிக உன்னத நிலையை

அடைந்துள்ளது. சித்தன்னவாசலில் அமையப்பெற்றுள்ள மண்டபத்திற்குச் செல்லும் வழியில் காணப்படும் தூண்களில் நாட்டிய மகளிர் நடனமாடும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. நாட்டிய உடையணிந்து. பலவித அணிகலன்கள் அணியப்பெற்று காணப்படுகிறது. குறுகிய இடை, பாம்பு போல் நெளியும் கரங்கள், அங்க அசைவுகள், கண்களில் ஒளி இவையாவும் ஒன்றிணைந்து, இன்னிசைக்கு ஏற்ற நடனமாடும் ஓவியம் வரையப்பட்டு, நாட்டியக்கலை விதிகளை இசையும், நாட்டிய ஓவியமும் இணைந்து வெளிப்படுத்துவது புலனாகிறது.

**ஆலயத்தின் சிறப்பக் கலைகள்**

ஆலய வழிபாட்டில் இருந்த கலைகள் தனித்தன்மை படைத்தவையாக இருந்துள்ளது. இன்று அவையெல்லாம் ஆலயத்திலும் இல்லை. இன்றைய கலை உலகத்திலும் இல்லை. சிறப்பு வாய்ந்த அந்த கலைகளைப் பற்றிப் பார்ப்போம். தனித்தன்மை வாயந்த அந்த கலைகளில் ஆடற்கலையில் கவித்துவம், மேளப்பிராப்தி, சுத்த நிருத்தம், குறவஞ்சி புசங்கத் திராசித நிருத்தம், குடவிளக்கு நிருத்தம், போன்ற ஆடல்கள் ஆலயத்தில் மட்டுமே ஆடப்பட்டு வந்ததாகும். இன்றைய நாட்டிய உலகில் இவைகள் இல்லையென்றே கூறலாம். கவித்துவம் இன்று ஆடப்பட்டாலும் நவசக்தி கவித்துவம் அதிகம் ஆடப்படுவதில்லை. இன்றைய நாட்டிய உலகில் புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதிசுரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனை, ஜாவளி, தில்லானா என்று உள்ளது. இது கடந்த நூற்றாண்டில் வடிவமைத்த ஒரு திட்டமாகும். இதே போல் நாகசுரம் என்று அமைக்கப்படும் பெருவங்கியத்தில் மட்டுமே இசைக்கப்படும், மல்லாரி, ரத்தி சின்னமல்லாரி, தேர்மல்லாரி, ஓடகூரு, எச்சரிக்கை என்ற இசைப்பாடல் வடிவங்கள் எல்லாம் இன்று ஆலய வழிபாட்டிலும் இல்லை, வெளியிலும் இல்லை, மல்லாரி மட்டும் வாசிக்கப்படுகிறது. ஆலயத்தில் அன்று இருந்த கலைஞர்களை இரண்டு வகையாக பிரித்திருந்தனர். அவை சின்ன மேளம், பெரியமேளம், நடன மங்கையர், நட்டுவனார், நட்டுமுட்டுக்காரர், பாடுபவர் துத்திக்கார் ஆகியோர் அடங்கின குழுவை சின்னமேளம் என்றும், நாதஸ்வரம், ஒத்து, தவில், தாளம் அடங்கிய குழுவை பெரிய மேளம் என்றும் பிரித்து வைத்திருந்தனர். இன்று ஆலயத்தில் பெரிய மேளம் மட்டும் இன்று இருக்கிறது சின்ன மேளம் இல்லை.

**ஆடல்கலையும் ஆலயமும்**

இயற்கையின் உருத்திரதாண்டவம், இடியாக, மின்னலாக. புயலாக எழுந்து ஆர்ப்பரித்தது கண்டு அச்சமுற்ற ஆதிமனிதன் இயற்கையை அமைதிப்படுத்த அதன் செயல்களையே தானும் பாவனை செய்து காட்டிய தன் வெளிப்பாடுகளை

ஆடலும், பாடலுமாய் உருப்பெற்றன என்று மானிடவியலார் குறிப்பர். காலப்போக்கிலே மனித சிந்தனைகளும் உணர்வுகளும் பண்பட்டு வளர்ந்த காலத்தில் இவை சாஸ்தீரியமாக அமைந்து கற்றோரையும், மற்றோரையும் பெரிதும் கவாலாயின. மனிதனின் உள்ளத்திலே இறையுணர்வு கருக்கொண்டு. உருப்பெற்ற பொழுது சித்திரம், சிற்பம் முதலியவற்றிலும் இறைவனுக்கு வடிவம் அமைத்து அதனை வழிபட்டான். இவையும் காலப்போக்கில் வளர்ந்து மனித உள்ளத்திலே எழும் தெய்வப் படிமங்களைப் பௌதிக வடிவில் உருப்பெறச் செய்தன. உலகம்எங்கணும் சமயம் சார்ந்த அழகியற் கலைகளின் வளர்ச்சி வரலாறு இதுதான். தெய்வ உருவங்களைப் போற்றிக் காக்கவும் வழிபடவும் அவற்றைக் காலப்போக்கிலே கோயில்களில் தாபிக்கும் மரபும் உருவாயிற்று. இம்மரபு யாவர்க்கும் பொதுவாயினும் இந்துக்களைப் பொறுத்தவரையில் கோயில்களும் தெய்வப்படிவங்களும் அவை சார்ந்த சிற்பச் சித்திரங்களும் ஆடலும் பாடலுமே எல்லாவித கலைகளுமாய் மலர்ந்துள்ளன என்று சொல்வதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

ஒரு மனிதரைப் பொறுத்தவரையில் அவருக்கு எல்லாமே தெய்வமயந்தான். “மாதா, பிதா, குரு, உணவு” என்ற அனைத்தையுமே அவர் தெய்வமாகப் போற்றுவதால் எவற்றிலும் உண்மை. அழகு. செம்மை என்பவற்றை அவரின் எல்லாவித வழிபாட்டிடங்களிலும் நாம்காணக்கூடியதாய் உள்ளது. அழியும் அழகிலிருந்து அழியாத அழகினை நோக்கி அவன் ஒவ்வொரு கணமும் யாத்திரை செய்கின்றார். என்றே கூறத்தோன்றுகிறது. அழியாத அழகு எங்கு உண்டு? இறைவனிலே தான் என்பதில் இந்துவுக்கு அளவு கடந்த நம்பிக்கை. சிற்ப சாஸ்திரங்கள் ஆகமங்கள், ஓவிய நூல்கள். நாட்டிய சாஸ்திரங்கள் இசை நூல்கள்யாவும் இறைவனுக்கே அர்ப்பணமாக்கப்பட்டு அவரையே சார்ந்து வளர்ந்தன. வளர்கின்றன. இத்தகைய மனப்போக்கு மனிதனின் கற்பனை வளர்ச்சிக்கும், எதார்த்த நோக்கிற்கும் தடை என்று இக்கால விமர்சர்கள் சிலர் கூறிய போதிலும் பெரும்பாலான இந்துக்கள் தமது கோட்பாட்டினின்றும் அணுவளவேனும் விலகிப்போக ஆயத்தமில்லை.

**கலைப்பணிகள்**

கலைகளின் பிறப்பிடமானது தில்லைத் திருக்கோயில் என்கிற வரலாற்றின் அடிப்படையில் அமைந்த தில்லைத் திருக்கோயிலில் கலைப்பணிகளாக மன்னர்கள் காலத்திலும், நாயக்கர்கள் காலத்திலும் இசை மற்றும் நாட்டியங்களை கால பூசையில் தேவதாசிகளைக் கொண்டு சமர்பித்து வந்தார்கள். தற்காலத்தில்

இசை மட்டுமே பூசை வழிபாடுகளில் பயன்பட்டு வருவதோடு, சபாக்களும், இசை மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. அவ்வாறாக நாட்டியத்தின் கடவுளாகவும், சின்னமாகவும் விளங்குகின்ற நடராஜப் பெருமானுக்கு உலகெங்கும் உள்ள நாட்டிய மணிகள் அஞ்சலி செலுத்தும் வகையில் அமையப்பெற்றிருப்பதே நாட்டிய அஞ்சலியாகும்.

‘தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்’ என்று திருத்தொண்டர் தொகையில் சுந்தர மூர்த்தி நாயன்மார்க்கு இறைவனே அடியெடுத்து கொடுத்த தில்லைவாழ் அந்தணர்களாகிய தீட்ஷிதப் பெருமக்களால் ஆண்டு தோறும் நாட்டிய அஞ்சலி விழாவானது நடத்தப்பட்டு வருகின்றது. சிதம்பரம் தரிசிக்க முக்தி என்கிற சொல்லுக் கேற்ப பரத அஞ்சலி நிகழ்த்தவருகின்ற நடன மணிகளுக்கு சிறப்பு தரிசனத்தையும் தந்து ஆடல்வல்லானுக்கு அஞ்சலி நிகழ்த்தவும் தில்லை நாட்டிய அஞ்சலி சிறப்பு பெற்றதாக அமையப்பெற்றவையாகும்.

பரதநாட்டியம் மட்டுமின்றி நாடெங்கிலும் உள்ள குச்சிபுடி, கதக், கதகளி, ஒடிஸி, மணிபுரி, கூடியாட்டம், ஜுகல் பந்தி போன்ற நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து சிறப்புற செய்து வருகின்றனர். நிகழ்ச்சியில் தில்லைவாழ் அந்தணர்களாக தீட்ஷிதப் பெருமக்களே தலைமையேற்று சிறப்பு விருந்தினர்களாக தில்லைவாழ் பொதுமக்களையும், செல்வந்தர்களையும், இசை மற்றும் நாட்டியத் துறையில் சிறந்து விளங்குகின்றவர்களையும், தமிழ் நாட்டின் மேதகு ஆளுநர் அவர்களையும் சிறப்பு விருந்தினர்களாக கௌரவித்து சமூகத்தின் நன்மதிப்பை பெற்று வருகின்றார்கள்.

**முடிவுரை**

தென்னிந்திய சிற்பக்கலையானது குறிப்பாகக் திருக்கோயில் கோபுரச் சிற்பங்கள் ஏராளமாக புராண இதிகாசக் கதைகளை எடுத்தியம்பும் கலைக்களஞ்சியங்களாக விளங்குகினறன இதைத் தவிர பல்வேறு கோயிற் சிற்பங்களாவன பரதக்கலையின் தொன்மையினையும். அதன் தெய்வீகத்தினையும். பிரதிபலிக்கும் கலைக்கூறுகளாகத் திகழ்கினறன சிற்பக் கலையில் பரதக்கலையின் பங்கு என்னும் கண்ணோட்டத்தில் இந்தியா முழுவதிலும் பலவாறு கிடக்கும் சிற்பங்கள் ஆற்றும் பணி அளப்பரியதும் அளவிட முடியாததும் ஆகும். ஆயினும் இவற்றுள் தஞ்சை, சிதம்பரம், கும்பகோணம் அருகில் உள்ள தாராசுரம் கோவில் சிற்பங்கள் என்பன சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன என்ற உண்மையினை எவரும் மறுக்க முடியாது. ஆடல் கலையானது அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரையில் மிகவும் உண்ணத நிலையை

அடைந்துள்ளது என்றால் அதற்கு முக்கிய காரணமாக தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களே சான்றாக அமையும் என்பதில் ஒருபோதும் ஐயமில்லை.

**துணைநின்ற நூல்கள்**


1. பத்மஸ்ரீ வழுவூர் B. ராமையாபிள்ளை, தெய்வீக ஆடற்கலை, வழுவூர் கிளாஸிகல் பரத நாட்டிய ஆர்ட் சென்டர், 12, பிருந்தாவன தெரு, மைலாப்பூர், சென்னை-600 004, முதற்பதிப்பு-1987.
2. சுபாஷிணி பத்மநாதன், நாட்டியக்கலை, விமலேதையா கிளாஸிகல் பரத நாட்டிய சென்டர், 46, பீட்டர் லேன், முதற்பதிப்பு-1993.
3. B. சுந்தரம், தானவர்ண தரங்கிணி, ராஜலஷ்மி அறக்கட்டளை, கோயம்புத்தூர் -9, முதற்பதிப்பு-2000
4. டாக்டர் ஏ.என். பெருமாள், தமிழர் இசை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை-600 113, முதற்பதிப்பு-1984.
5. கி. விஜயலெஷ்மி, தேவாரத் திருமுறையில் நடனம் பற்றிய செய்திகள் (முதுகலை பரதநாட்டியம்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 2020.